
Koviloor Digital Library

சேக்கிழார் மன்ற அறக்கட்டளை வெளியீடு

ஔவையார்

விநாயகர் அகவல்



3-2

Acc. No. 17915
3-2
Ql. 4173

உரை : பேராசிரியர் கொ.பூமிநாதன்



ரெப்கோ வங்கி

வளருங்கள் எங்களுடன்
இந்திய அரசு நிறுவனம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

திருச்சிற்றம்பலம்

3-2

ஔவையார்

விநாயகர் அகவல்


17915
௨1:4173



உரை : கொ. பூமிநாதன் எம்.ஏ.,எம்.எட்.,டி.ஏ.,

வெளியீடு :
சேக்கிழார் மன்றம் அறக்கட்டளை
இராசபாளையம்.
2014

உதவி :


ரெப்கோ வங்கி


Koviloor Digital Library

Swami Omkarananda

வேதபுரி, தேனி
ஸ்ரீவிஜய, ஐப்பசி 17
ஞாயிற்றுக்கிழமை
(03-12-2013)

அணிந்துரை

உயிர்களுக்கு உயிராக விளங்குபவன் இறைவன். நல்வினைப் பயனால் ஒரு சில உயிர்களுக்குத் தான் அரிதான மனித உடல் வாய்க்கிறது. குறைபாடுகளில்லாத மனித உடல் கிடைப்பது மிகவும் அரிது. ஹிந்து மத அறிவு நூல்கள் உயிர்க்கு வாய்த்துள்ள மனித உடலில் சிறப்பைப் பேரன்புடன் அறிவுறுத்துகின்றன. உயிர் வாழும் மனித உடலின் சிறப்பு நல்லறிவு, நல்லறம், தூய அன்பு ஆகும். இச்சிறப்பினை உணர்ந்து அவற்றை வாழ்நாள் முழுவதும் வளர்க்க மனித உடல்களில் வாழும் உயிர்கள் கடமைப்பட்டிருக்கின்றன.

கற்க வேண்டிய நூல்களைக் கசடறக் கற்றால் அறிவை வளர்க்கலாம். கற்றதற்கு ஏற்ப அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் முதலானவற்றை நீக்கும்வண்ணம் இடைவிடாது அயராது செயல்புரிவதால் அறத்தை வளர்க்கலாம்.

அன்பு வளர்ச்சிக்கு அறவாழி அந்தணன் தாளைச் சார்ந்திருக்க வேண்டும். பொருள் சேர்ந்த புகழ் மொழிகளால் அவற்றைப் போற்றிப் பரவ வேண்டும். இரவும் பகலும் பிரியாது வணங்க வேண்டும்.

நம்மைப் பெற்ற தாயினும் இனிய தமிழ்த்திருநாட்டில் எண்ணற்ற சமயச் சான்றோர்கள் தோன்றி, அருளோடு கூடிய அன்பு வளர்ச்சிக்கு அமுதினும் இனிய அருட்பாடல்களை, நாம் ஓதி உணர்ந்து உய்வு பெறுவதற்காக இறைவனின் அருளால் வழங்கியிருக்கிறார்கள். வழங்கியும் வருகிறார்கள்.

Kovilloor Digital Library

நமது பேரன்பிற்குரிய சேக்கிழார் மன்றம் அறக்கட்டளை அன்பர்கள் முப்பது ஆண்டுகளாக பல்வேறு சமுதாயப் பணிகள் ஆற்றி வருகின்றனர். வரவிருக்கும் மார்கழித் திங்கள் ஆண்டு விழாவில் விலையில்லா வெளியீடாக விநாயகர்அகவல் உரையுடன் கூடிய புத்தகம் வெளியிடுவது குறித்து மிக்கமகிழ்ச்சி அடைகின்றோம். பொருளோடு சேர்ந்த புகழ்மொழிகளாகிய ஆண்டவனின் அருட்பாடல்களை வகுத்துத் தொகுத்து இறை அன்பர்களுக்கு வழங்கி மகிழ்வதில் ஆர்வம் கொண்டு அருளின்பத்தை அள்ளிப் பருகிவருகிறார்கள் சேக்கிழார் மன்றம் அறக்கட்டளை அன்பர்கள். ஸ்ரீவிநாயகப் பெருமானின் அருட் துணை கொண்டு அனைவருக்கும் இந்நூலை வழங்கி மகிழ்வதை அறிந்து நானும் பெருமகிழ்வடைகிறேன்.

தமிழ் மூதாட்டி ஒளவைக்கு தமிழ்த்தாய் அளித்த இவ்வருட்பா மாலையை "அனைவரும் ஒவ்வொரு நாளும் காதலாகிக் கசிந்து ஓத வேண்டும். உண்மையை உணர வேண்டும். உய்வு பெற வேண்டுமென" ஆதிகுருவின் திருவடிகளைப் பணிந்து போற்றி வணங்கி வாழ்த்தி மகிழ்கிறேன்.

கணபதிராயன் அவனிரு காலைப் பிடித்திருவோம்
குணமுயர்ந்திடவே விடுதலை கூடி மகிழ்ந்திடவே.

–அருட்திரு மகாகவி பாரதியார்

ஓம் நமோ நாரயணாய

பேரன்புடன்

ஸ்வாமீ ஓங்காராநந்த

Acharya: Adiguru Sri Prajna Dakshinamurthi Vidya Pitham, Theni. &
Sri Bhuvaneswari Avadhuta Vidya Pitham, Pudukkottai.
Founder & Managing Trustee : Vedanta Sasthra Prachara Trust &
Sri Dakshinamurthi Seva Samithi, Theni

Koviloor Digital Library

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்
ஞானவள்ளல் மகாகனம் தங்கசுவாமி

அணிந்துரை

இராஜபாளையம் சேக்கிழார் மன்றம் அறக்கட்டளை பொதுச் செயலர் கொ. பூமிநாதன் அவர்களால் அவ்வையார் அருளிய விநாயகர் அகவல் பாமாலைக்கு உரை எழுதியதைக் கண்டோம். ஆன்மீகமார்க்கத்தில் நான்கு வழிகள் உண்டென்பர். அகவலில் முதலில் வருவது சரியை மார்க்கம், இரண்டாவது வருவது கிரியை மார்க்கம், மூன்றாவது வருவது யோக மார்க்கம், நான்காவது வருவது ஞான மார்க்கம். இவைகளை ஆய்வு செய்வதற்கு முன் சில செய்திகளை நோக்கிடுவோம்.

தமிழ் உலகின் பெருமைவாய்ந்த செவ்வியல் மொழி என்பது இத்துறையில் ஞானம் உள்ளவர்கட்கு ஐயம்திரிபற்ற வெளிப்படை சங்கத் தமிழ் பாடல்கள் தொகுப்பில் ஏறத்தாழ 457 புலவர்கள் பாடிய பாடல்கள் இடம் பெற்றிருக்கின்றன.சங்கத்தமிழ் பாடல்கள் கி.மு. இரண்டாவது நூற்றாண்டின் இறுதியில் இருந்து கி.பி. மூன்றாவது நூற்றாண்டின் நடுப்பகுதி வரை ஏறத்தாழ 400 ஆண்டுளில் பாடப்பட்டிருக்கலாம் எனக் கணிக்கப்படுகிறது. சங்கத் தமிழ் பாடல்கள் தொகுப்பில் இடம் பெறத்தக்க தரமுடைய பாடல்களைப் படைக்கும் தகுதி வாய்ந்த கவிஞர்கள், புலவர்கள் சுமார் 500 பேர் ஒரு நானூறு ஆண்டு காலத்தில் வாழ்ந்தவர்கள் என்பதே வரலாற்றறிஞர்கள் மகிழ்வோடு கொள்ள வேண்டிய செய்தியாகும்.

சங்கத்தமிழ் பாடல்களைப் புனைந்த புலவர்களில் சமுதாயத்தில் எல்லாப் பிரிவினைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். அரசர், அமைச்சர்,அந்தணர் (அந்தணர் என்போர்அறவோர்) வணிகர், கணக்கர், வேடர், கூலவாணிகர், குயவர் என எல்லா வகையான தொழில் துறைகளில் இருந்தும் தமிழ் புலவர்கள் உருவாகி இருக்கிறார்கள். பாடியிருக்கிறார்கள்.

Koviloor Digital Library

சங்கப் புலவர்களில் 30க்கும் மேலானவர்கள் பெண்கள். ஏறத்தாழ 7 விழுக்காடு பெண் கவிஞர்கள் சங்க காலம் தாண்டி பல்லவர் காலம், பாண்டியர் காலம்,சோழர் காலம், நாயக்கர் காலம், மேலை நாட்டவர்கள்ஆட்சிக் காலம், மேலும் சென்ற நூற்றாண்டிலும் சேர்ந்து நாடறிந்த கவிஞர்களில் 10 விழுக்காடு பெண்கள் கூட இல்லை.

சங்கத் தமிழ் காலத்தில் பெண்பாற்புலவர்கள், பாரி, அதியமான் போன்ற அரசர்களுக்கு அரசவைத் தூதர்களாகவும் அறிவுரை கூறிடும் அறநெறிக் காவலர்களாகவும் இருந்து வந்துள்ளனர். இருபதாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழ்நாட்டின் எழுத்தறிவு நிலை 10 விழுக்காடு கூட இல்லை. இந்தப் பின்னணியில் சங்க காலத் தமிழர்கள் பரந்த எழுத்தறிவு பெற்றிருந்தார்கள் என்பது ஒரு புரட்சிகரமான கண்டுபிடிப்பாகும்.

ஆனால் சுமார் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே ஔவையார், காரைக்கால் அம்மையார் போன்ற பெண்ஞானிகள் தமிழ்நாட்டில் வாழ்ந்து எடுத்துக்காட்டாக இருந்துள்ளார்கள் என்பதை நினைக்கும்போது நம் நெஞ்சமெல்லாம் மகிழ்கின்றது.

ஒரு காலத்தில் தமிழக ஆலயங்களில் தமிழ் தானே பிரவாகமாக ஓடியது. ஆரியர்களின் அபரீதமான நசுக்கல் தான் இந்த "சமஸ்கிருத சங்கேதம்" இந்த சமஸ்கிருத ஆதிக்கத்தால் நாம் நேரிடையாகக் கடவுளை அணுக முடியாதபடி ஒரு பொய்யான இடைவெளி. நம் மொழி பேசினால் இறைவன் புரிந்து கொள்ள மாட்டாரா என்ன?

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
என்ற சொல்லுக்கு பொருளில்லாது போய்விடுமா என்ன?

செந்தமிழால் வைதாரையும் வாழ
வைப்பான் முருகன்
என்ற அருணகிரியார் கூற்று பொய்யாகுமா?

அடுத்தவரின் உதவியோடு இறைவனைக் காண மனமில்லாத தால்தானே நமது உடம்பில் இறைவனைக் காண முற்பட்டனர்.

Koviloor Digital Library

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்

என்று இறைவனை நம் உடம்பிலேயே காண ஆரம்பித்தனர்.

இதைத் தானே விநாயகர் அகவலும் இறுதியில் உறுதிபடக் கூறுகிறது. உடம்பும் உள்ளமும் இணைந்தமுறையிலே வழிபாடு இயங்கும் போது இறை ஆற்றல்கள் நமக்கு வசமாகின்றன.

மறை சொல்லும் வேதம்
மனித வேடமாய் வந்தது

அதாவது மறைகள் சிறப்பித்துப் பாடுகின்ற இறைவனே மானிடச் சட்டை சாத்தி குருவின் வடிவாய் வந்து தோன்றி இருக்கிறான் என்பார்கள். குருவைஇறைவனாகப் பார்க்க வேண்டும். இறைவன் நம்மோடு பேசாத கடவுள். குரு நம்மோடு பேசுவதுடன் நமக்குப் புரியாத நுட்பங்களை எல்லாம் நமக்குப் புரிகின்ற மொழிகளிலே எடுத்துவிளங்குகின்ற பரம்பொருளாகும்.

மூலாதாரத்து மூண்டெழு கனலைக்
காலா லெழுப்பும் கருத்தறி வித்தே

- விநாயகர்அகவல் 43,44

ஔவையாரின் ஆழ்ந்த கருத்தினை நோக்குவோம்.

அகார உகார மகாரங்கள் ஒன்று கூடி ஓங்காரம் என்று உண்டாவதனாலே அதை மூன்று காத ஒலி என்றும் முக்காத ஆறு என்றும் ஞானஉலகம்பேசி மகிழும். அ, உ, ம் என்ற மூன்று ஒலிகளாலும் ஒன்றி நிற்பது ஓம் என்ற ஆதார ஒலி ஆகும். அ என்ற எழுத்து “இடைகலை நாடி” இது இடக்கண் பார்வையோடு பொருந்தியது. உ என்ற எழுத்து “பிங்கலை நாடி” இது வலக்கண் பார்வையோடு பொருந்தியது. ம் என்பது சிர நடுவின் உச்சியிலே உள்ள அதிர்வு நிலை. இதுவே “சுழு முனை நாடி”யிலுள்ள ஓங்காரம் ஒலிக்குமிடமாகும். சித்த மாமுனிவர்கள் கூறும் மூன்று மண்டலங்கள் இவை என்பதே அவர்களின் இரகசியமாகும்.

Kovilloor Digital Library

மூலக் கனலை காலால் எழுப்புவதே காலனைக் காலால் உதைக்கின்ற உத்தி முறை என்றும், மரணமிலாப் பெரு வாழ்வுக்கு வழி என்றும் பெருமை பேசும் ஞான உலகம். அந்த உத்திமுறையின் பயன்களையும் அகவல் அருமையாகப் பேசும். அந்தகன் எழுதிய எழுத்தை அழித்தெழுதும் எழுத்து ஆம். கூற்றுவன் எழுதிய எழுத்தையே மாற்றி எழுதும் வழி இது ஒன்று தான் என்பதையும் அழுத்தமாகக் கூறும் அகவல். ஆசிரியர் கொ. பூமிநாதன் அருட்பணி தொடரட்டும். ஆன்மீக தாகம் உள்ள அன்பர்கள் அவர்களை நாடி பயனடையட்டும் என வாழ்த்துகிறேன்.

இங்ஙனம்,

ஞானவள்ளல்

மகாகனம் **தங்கசுவாமிகள்**

உலக அறிவார்ந்தோர் இயற்கை ஞானசபை,

ஞானசபை சாலை,

சிவத்தையாபுரம்–628 251.

சாயர்புரம் அஞ்சல்.

தூத்துக்குடிமாவட்டம்.



Koviloor Digital Library

திருச்சிற்றம்பலம்

தண்டாங்கோரை நடேச கணபதி

வாழ்த்துரை

இராஜபாளையம் சேக்கிழார் மன்றம் அறக்கட்டளை பொதுச் செயலர் கொ. பூமிநாதன் அவர்கள் ஔவையார் இயற்றிய விநாயகர் அகவல் என்னும் எழுபத்து இரண்டு வரிகள் கொண்ட பாடலுக்கு ஒரு சிறிய உரையை எழுதி மேற்படி அறக்கட்டளையின் மூலம் வெளியிட்டுள்ளார். விநாயகர் அகவல் ஒரே தொடராக உள்ள ஒரு பாடலாகும். அது ஒரு தோத்திரப் பாடலாகவும், சாத்திரப் பாடலாகவும் பாடப்படுகிறது.

இந்தப் பாடலின் முதல் பகுதி விநாயகரைப் பற்றிய ஒரு மகிழ்ச்சி நிரம்பிய வருணனை. ஔவையார் விநாயகரின் தெய்வீகத் தனித் தன்மையை அவருடைய யோகக் கண் கொண்டு புறஉருவப் படுத்திக் காட்டியுள்ளார். தன்னுடைய ஆன்மீக ஞானத்திற்கும், குண்டலினி யோகப் பயிற்சிக்கும் ஒரு குருவாக அவர் விநாயகரை இந்த அகவலில் காட்டியுள்ளார் மேற்கூறிய அனைத்து விஷயங்களையும் சமூகக் கண்ணோட்ட நெறியின் மூலம் திரு பூமிநாதன் அவர் உரையில் அழகுற வெளிக் கொணர்ந்துள்ளார். அதற்கு அவருக்கு என்னுடைய வாழ்த்துக்கள்.

விநாயகர் அகவலை ஒரு தனிப்பட்ட (குண்டலினி) யோக நூலாக உரை எழுதும்படி அவரைக் கேட்டுக் கொள்கிறேன். திரு கொ. பூமிநாதனுக்கு மறுபடியும் என் வாழ்த்துக்கள்.

தண்டாங்கோரை நடேச கணபதி

(T N. கணபதி)

Koviloor Digital Library

ந. செண்பகம்

வாழ்த்துரை

தமிழகத்தில் அனைவரும் அறிந்த பெயர் ஔவையார்.

பெண்பாற் புலவர்களுள் மூத்தவர். மூதறிஞர் என்று போற்றத்தக்கவர். தமிழ் இலக்கிய ஆய்வாளர்கள் மூன்றுக்கு மேற்பட்ட ஔவையார்கள் வாழ்ந்திருக்கலாம் என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

புற நானூற்றிலும் மற்றுமுள்ள தொகை நூற்களிலும் உள்ள ஔவையின் பாடல்கள் ஐம்பத்தொன்பதாகும். சங்க காலத்து ஔவையாரும், ஆத்திசூடி பாடிய ஔவையாரும் மக்கள் மனதில் இடம் பெற்றது போன்று, ஞானக் குறளும் விநாயகர் அகவலும் பாடிய ஔவையார் பரவலாக அறியப்படவில்லை. இவ்விரண்டு நூல்களும் சாத்திரப் பாடலாகவும், தோத்திரப் பாடலாகவும் பாடப்பட்டு, வருகின்றன.

சேக்கிழார் மன்றக் கூட்டத்தில் இத்தகைய பாடல்களின் நயம் பாராட்டி, பொருள் விளக்கம் செய்து வருகிறார் பொதுச் செயலர் கொ. பூமிநாதன் அவர்கள்

வேதாந்த, சித்தாந்தக் கருத்துக்களை நன்கு கற்றுத் தெளிந்த பேராசிரியரின் பேச்சு காற்றிலே கரைந்து விடக் கூடாது என்று கருதினோம். நாம் பெற்ற பயனை பலரும் அடைதல் வேண்டுமென்று முடிவு செய்தோம். அதுவே ஔவையின் விநாயகர் அகவல் நூல் வடிவம் பெறச் செய்ய அவனருளால் அவன்தாள் வேண்டினோம்.

எங்கள் அறக்கட்டளை நிதியினை வைப்பு நிதியாகப் பெற்று பத்திரப்படுத்தி, பாதுகாத்து, பயன்படுத்த வசதி செய்து தருகின்ற (Safe, Secure, Service) **ரெப்கோ வங்கியின்,** இராஜபாளையம் கிளை மேலாளர் திருமிகு P. பாலமுருகன் அவர்களை அணுகினோம்.

Kovilloor Digital Library

வாடிக்கையாளர்களின் திருப்தியை விட அவர்களது மகிழ்ச்சியை முக்கியக் குறிக்கோளாகக் கொண்ட மேலாளர் அவர்கள், உரிய அனுமதி பெற்று உதவி செய்திட ஒப்புதல் அளித்தார்கள். அண்மையில் தான் ரெப்கோ வங்கி பல்வேறு வைப்பு நிதித் திட்டங்களை அறிவித்து மக்களின் எதிர்கால நல்வாழ்விற்கு வழி வகுத்துள்ளது.

இதுபோன்ற சமுதாயச் சேவைகளிலும் "ரெப்கோ வங்கி" தன்னை ஈடுபடுத்திக் கொள்வதை நாங்கள் மிகவும் பெருமை பொங்க வரவேற்கிறோம்.

பூஜ்யர் ஸ்ரீ சுவாமி ஓங்காரநந்தா அவர்களும், ஞானவள்ளல் மகாகனம் தங்கசுவாமிகள் அவர்களும், அறிஞர் நடேச கணபதி அவர்களும் பேராசிரியரின் உரைக்கு அரியதோர் அணிந்துரை வழங்கி சிறப்பித்துள்ளதற்கு மன்றத்தின் சார்பில் நன்றியினை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழும் சைவமும் தழைத்தோங்கச் செய்க!

சித்தாந்த ரத்தினம்
பாரதி பணிச் செல்வர்

நல்லாசிரியர் **ந. செண்பகம்** எம்.ஏ., எம். எட்.,
மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் (பணி நிறைவு)
தலைவர், சேக்கிழார் மன்றம் அறக்கட்டளை
115/118, ஸ்ரீ பாலாஜி இல்லம்,
ஆர்.ஆர். நகர். பி.எஸ்.கே. நகர்,
இராஜபாளையம் - 626 108

Kovilloor Digital Library

உரையாசிரியர் உரை....

" வித்தக விநாயக விரைகழல் சரணே "

தனக்கொரு தலைமையில்லாத் தன்மையான் ; ஆன்மாவின் தோற்றமும் ஒடுக்கமும் உள்ள மூலாதாரத்து முன்னவன் ; சத்தியம்மை பெற்ற பெருமகன் ; சித்தி புத்திக்குச் சொந்தமானவன்.

எல்லாம், நமக்கு மெய்ப் பொருளை உணர்த்த, பற்றுக் கோடாகக் கொள்ள, கொண்ட வடிவம் ; எத்தனை வேதாந்த நூல்கள் உளவோ அத்தனையின் சாரம் விநாயகர் அகவல். சித்தாந்த நூல்களின் தெளிவு விநாயகர் அகவல்.

இதற்கு விரிவான உரை எழுத அறிவுறுத்தினார் திருமிகு த. ந. **கணபதி ஐயா** அவர்கள். உலகையே சுருக்கி கைக்குள் கொண்டு வந்த பழக்கத்தில் உள்ளவர்கள், படிக்காமல் விட்டு விட வாய்ப்பு உண்டு என்பதால் விரிவஞ்சிச் சுருக்க உரை எழுத நேரிட்டது. என்ன மெய்ப் பொருள் என்பதை அறிந்த பின் பெருமக்கள் பலருடைய நூல்களைப் படிப்பர்.

விநாயகர் அகவலில் அம்மா தொகைக் குறிப்பாகக் கூறிய பொருள் என்னவெனப் பலரும் பலவாறாகப் பொருள் கொள்ளும்படி செறிவாக உள்ளது. எடுத்துக்காட்டாக, " சண்முக தூலமும், சதுர்முக சூக்கமும், எண்முகமாக...." என்பவை.

Koviloor Digital Library

முருகப் பெருமானின் ஆறெழுத்து மந்திரம் எது? " சரவண பவ " என்பதா? இதன் பொருள் சரவணப் பொய்கையில் தோன்றியவன் என்பது தானே? இது எப்படி மந்திரமாக முடியும்? வள்ளலார் பெருமான் " குமாராய நம " என்பது ஆறெழுத்து மந்திரம் எனக் குறிப்பதாகப் பொருள் கொள்கிறார்கள். எட்டெழுத்து மந்திரம் என்பதும் ஒவ்வோர் எழுத்தும் தரும் பொருள் உண்டா? பெருமானின் நமசிவய என்பதிலிருந்தே எல்லா மந்திரச் சொற்களும் உருவாயின என்று திருமூலர் திருமந்திர மாலையிலும், திருமந்திரத்திலும் குறிப்பிடுகிறார். அந்த அடிப்படையில் தான் இதற்கான உரை காணப்பட்டுள்ளது.

இன்னொரு விநாயகர் அகவலும் நக்கீரர் என்ற பெயரில் தோன்றிவர் எழுதியுள்ளார். இவர் ஔவையின் பின் வந்த புலவர். இந்நூலும் 164 அடிகள் கொண்டு ஔவையின் பொருள் அமைப்பில் உள்ளது.

தேவாரம் முதல், நூல்கள் பல விநாயகரைப் போற்றி வழிபடுகின்றன. எட்டுக் கணபதிகள் வடிவம் ; பதினாறு கணபதி வடிவங்கள் உள்ளனவாக திரு விசயரங்கன் அவர்கள் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு தலத்திலும் உள்ள விநாயகருக்குரிய பெயர்கள் பலப்பலவாக உள்ளன.

ஔவைப் பெருமாட்டி சங்க காலம் முதல் இன்று ஆத்திச்சூடி ஔவை வரை மூவர் - நால்வர் என ஆராய்கிறார்கள். திருமூலர் ஒருவராகக் காணப்படுகிறார். சித்தர் பெருமக்கள் மக்களுக்கு நல்லன உணர்த்த, பல்லாயிரம் ஆண்டுகள் நிலை பெற்றிருப்பவர்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. ஔவையும் சித்தர் பெருமாட்டியாகப் பல்லாண்டுகள் வாழ்ந்திருக்கலாம் ; மீண்டும் தோன்றலாம்.

Kovilpatti Digital Library

எங்கள் சேக்கிழார் மன்ற அறக்கட்டளைத் தலைவர் இதன் பொருள் கூறக் கேட்ட கூட்டத்தில் " உரையெழுதுங்கள், பலர்க்கும் பயன்படட்டும் ; விலையில்லா நூலாக வழங்கி மகிழ்வோம் " என்றார்கள். இதை அறிந்த ரெப்கோ வங்கி இராஜபாளையம் கிளை மேலாளர் திருமிகு P. பாலமுருகன் அவர்கள் வங்கியின் பொருளுதவியில் வெளியிட வேண்டினார். ஆன்மீக வழியில் வங்கியின் சிறப்பை அறிவித்துப் பயன் பெறச் செய்யும் அன்பு வழியல்லவா! மகிழ்ந்தோம்! நன்றி!!

இந்நூலுக்கு, தவத்திரு சுவாமி ஓங்காரநந்தா அவர்கள் ஞானவள்ளல் மகாகனம் தங்கசுவாமிகள் அவர்கள், தண்டாங்கோரை நடேச கணபதி ஐயா அவர்கள் ஆகியோர் அணிந்துரை வழங்கியமைக்கும் வணக்கம். இந்நூல் வடிவம் பெறச் செய்த முத்து அச்சகத்தாருக்கும் நன்றி!

சிறப்பாக இந்நூலைப் படித்துப் பயன் பெறப் போகிற பெருமக்களுக்கு முதல் வணக்கம். நன்றி!

பேராசிரியர் **கொ. பூமிநாதன்**
பொதுச் செயலர்,
சேக்கிழார் மன்றம் அறக்கட்டளை
100, முகில்வண்ணம் தெரு.,
இராஜபாளையம் - 626 117.

Koviloor Digital Library

விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாட
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரு மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென துளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திரம் இது பொருளென
வாடா வகைதான் வந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே

Koviloor Digital Library

உவட்டா உபதேசம் புகட்டி என் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்குங் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்கிச நிலையும்
பேரா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனை கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்தி
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையும் காட்டி

Koviloor Digital Library

சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரிஎட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி 54
என்னை அறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கு மனமு மில்லா மனோலயந்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டிற் கொன்றிட மென்ன
அருள் தரும் ஆனந்தத்து அழுத்தியென் செவியில் 60
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவா யப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி 66
வேடமு நீறும் விளக்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சுஅக் கரத்தினரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துக்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே. 72

Koviloor Digital Library

ஔவையார்

விநாயகர் அகவல்

ஔவைத் தாயின் அடிமலர் போற்றி! ஆசிரியப் பாவாகிய அகவற்பாவால் விநாயகப் பெருமானைப் போற்றி வழிபடுவது இந்நூல். ஔவைப் பெருமாட்டியின் சிறந்த யோக நூல்.

விநாயகரின் தோற்றப் பொலிவு :

திருவடி முதல் உச்சி வரை விநாயகரின் அழகு வருணனை. கால் முதல் கபாலம் வரை என்பதே யோகத் தொடக்கம் அல்லவா!

விநாயகப் பெருமான் பாதம் சந்தன மணம் கமழ்வது. செந்தாமரைப் பூப்போன்று சிவந்த நிறமும் மென்மையும் உடையது. இந்தப் பாதத்தில் அணிந்துள்ள வீரச்சிலம்பு பலப்பல இசையுடன் ஒலிக்கிறது. பொன்னாலாகிய இடுப்புக் கயிறும், மெல்லிய மலர் போலும் ஆடையும் வனப்புமிகு இடுப்பில் மேலும் மேலும் அழகை வளர்க்கின்றன.

நகை வைக்கும் மூடிய பெட்டி போன்ற வயிறும், பெரிய கனமான தந்தமும், யானை முகமும், அதில் விளங்கும் சிவந்த பொட்டழகும் கண்ணைக் கவர்கின்றன. ஐந்து கைகளும், அடியவர்களின் ஐம்பொறி மத யானையை (உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும்) அடக்கும் அங்குசம் இருக்கிறது. பாசமும் இருக்கிறது.

Koviloor Digital Library

நெஞ்சில் நிலைத்திருக்கும் கருநீல உடம்பு :

கீழ் நோக்கித் தொங்கும் வாய் ; நான்காகிய பெரிய தோள்கள் ; மூன்று கண்கள் ; மூன்று மதநீரும் வழிந்த சுவடுடைய முகம் ; இரண்டு காதுகள் ; ஒளிரும் பொன் மகுடம் ; மார்பில் முப்புரி கொண்ட மூன்று நூல் ; ஆகியவை தோற்றப் பொலிவைத் தருகின்றன.

இத்தகைய பெருமைகளை உடைய விநாயகரை அழைப்போம் ; தாளில் சரணடைவோம்.

அற்புதம் நின்ற கற்பகக் களிறே !

சொல்லுக்கும் பொருளுக்கும் அப்பாற்பட்டு தன் வயமாகத் தவநிலை ஞானம் கொண்டு அற்புதஞ் செய்யும் கற்பக விநாயக யானை முகக் கடவுளே! மூன்று பழங்களைச் சுவைப்பவரே! மூஞ்செலி வாகனரே! இப்பொழுதே என்னை ஆட்கொள்ள வரவேண்டும். குழந்தையை நினைந்து அருளமுதம் ஊட்ட வரும் தாய் போல் எனக்கு முன் எழுந்தருளி வரவேண்டும். மாயையால் வந்த பிறவி ஆசையை அற்றுப் போகச் செய்ய வேண்டும்.

நமசிவய – ஐந்தெழுத்து மந்திரம் :

அஉம் – ஓம் ஆகி இதிலிருந்து நமசிவய என்னும் ஐந்தெழுத்து மந்திரம் (திருமூலர்) திருந்தி வந்ததெனத் தெளிவு பெற்று உள்ளத்தில் பொருந்தியிருக்கும்படி புகுந்தாய் ; குரு வடிவம் கொண்டு இவ்வுலகில் என்

Koviloor Digital Library

தலையில் திருவடி வைத்தாய் ; என்னை அறிவுத் தூய்மை செய்தாய் ; இதுதான் நிலைத்த உண்மைப் பொருள் என்று நிலைத்து இருக்கும்படி மகிழ்ந்து எனக்கு அருள் செய்தாய். இமயத்தில் எழுதிய கொம்பாகிய ஆயுதத்தால் வளைந்து வட்டமிட்டுச் சுற்றிச் சுற்றி வரும் பிறவிக்குக் காரணமாகிய வினையினைக் களை எடுத்தாய். குழந்தையாகிய எனக்குப் பால் போல் உபதேசம் புகட்டும் போது குமட்டாதபடி ஊட்டினாய். திகட்டாத ஞானத் தெளிவாகிய உன்னை அனுபவிக்கும்படி செய்தாய்.

இன்புறு கருணை :

ஒருமையுள் ஆமைபோல் ஐம்புலன்களையும் சென்ற இடத்தில் எல்லாம் செல்ல விடாமல் அடக்கும்உபாயத்தை மகிழும் கருணையால் இனிமையாக அருளினாய். இதன் மூலம் மற்ற புறக் கருவிகள் அனைத்தும் ஒடுங்கும் என்ற கருத்தை அறியச் செய்தாய். மாயையை மடங்கச் செய்தாய். இருவினைக் கன்மத்தை அற்றுப் போகச் செய்தாய். இதன் மூலம் ஆணவ இருளை ஓட்டினாய்.

வாசனாமலம் நீக்கம் :

ஞானத்தில் சரியை, ஞானத்தில் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என்ற நான்கு தலங்களைத் தந்தாய். மூன்று மலங்களின் வாதனை ("போத மேலாகப் பாண்டே புல்லிய மல நோய் தீர்ந்தும் வாதனை தாக்குமா போல்" இன்றி) இல்லாமல் செய்தாய். அசபா மந்திரத்தால் ஒன்பது வாசல்கொண்ட ஐம்புலன்களாகிய கதவைத் திறக்க

Koviloor Digital Library
முடியாதபடி அடைத்தாய். ஆன்மா ஆறு ஆதாரங்களை ஊடுருவிக் கடந்து ஆக்ஞையில் நிலைநிற்கும் அங்கிச நிலையைப் பெயராதபடி நிலைநிறுத்தினாய். பேச்சும் உரையும் இல்லாமல் சொல்லற சும்மா இருக்கச் செய்தாய்.

மூன்று மண்டலம் :

இடகலை பிங்கலை மூச்சுகளினால் இயல்பாகவே எழும் அ, உ என்ற எழுத்துக்களை அறியச் செய்தாய். மூலாதாரத்திலிருந்து நடுநாடியாகிய சுழுமுனை நாடி வழியாகப் பிராணனை ஏற்றி கபாலமாகிய பிரமரந்திரத்தை அறியும்படி செய்தாய். உடலினுள் உள்ள மூன்று மண்டலங்களாகிய நெருப்பு மண்டலம் (மூலாதாரம் - சுவாதிட்டானம் - குதம் முதல் கொப்பூழ் வரை) சூரிய மண்டலம் (மணிப்பூரகம், அநாகதம் - கொப்பூழ் முதல் நெஞ்சு வரை) சந்திர மண்டலம் (விசுத்தி முதல் ஆக்ஞை - நெஞ்சு முதல் நெற்றிப் பொட்டு வரை) ஆகிய மூன்றிலும் தூண் போல் உயர்ந்து ஒவ்வொன்றையும் முட்டிச்செல்வது பிராணன்.

இப்பிராணன் குண்டலினியோடு பாம்பு போல் மேலெழுந்து நாக்கினைத் தாண்டி வாய் வழியாக வராமல் உள்ளே அடைப்பதை உணர்த்தினாய்.

" அண்ணாக்கை ஊடே அடைத்தே அமுதுண்ணேன்; அந்தரதரத்தை அப்பொழுதே எண்ணேன் "

— இடைக்காடர்

" ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர் ஞான விளக்கினை ஏற்றி நன்புலத்து
ஏனை வழி திறந்து ஏத்துவார்க்கு இடர் ஆன கெடுப்பன அஞ்செழுத்தும்மே "

— தேவாரம்

Koviloor Digital Library

குண்டலினி சக்தி :

மூலாதாரத்தில் மூன்றரைச் சுற்றாகச் சுருண்டிருக்கும் குண்டலினி சக்தியை எழுப்பி, மேலே எழும்பும் போது பிளப்பதால், தானாக உருவாகும் மந்திர ஒலிகளை புறத்தில் கேட்கும்படி உரைத்தாய். மூலாதாரத்தில் மூண்டு கொண்டிருக்கும் நெருப்பால் பிராணனாகிய உயிர்க் காற்றை மேல்நோக்கி உயர்த்த வேண்டும் என்ற கருத்தை நிலையாக்கினாய். (“ உருத்தரித்த நாடியில் ஒடுங்குகின்ற வாயுவைக் கருத்தினால் இருத்தியே கபாலம் ஏற்ற வல்லிரேல் விருத்தரும் பாலராவர் மேனியும் சிவந்திடும் அருள்தரித்த நாதர் பாதம் அம்மை பாதம் உண்மையே ”) அப்படி மேலேறும் பிராணனொடு ஆன்மா, மூலத்தீ, அநாகதத் தீ, ஆக்ஞைத் தீ என்ற முத்தீயிலும் நிற்கும் முத்தி நிலையில் அமுதம் பொழியும் ; அதை உண்டவர் சந்திர சூரியர் இயக்கம் அறிவர். கங்குல் பகல் அற்ற எல்லையில் நிற்பர். வயது வரம்பின்றி இளமையாய் என்றும் வாழ்வர் என உணர்த்தினாய்.

உடற்சக்கர உறுப்பு :

மூலாதாரத்திற்கும் அநாகதத்திற்கும் இடையில் உள்ள சுவாதிட்டானம், மணிப்பூரகம், என்பனவற்றின் ஆறு இதழ் பத்து இதழ் ஆகப் பதினாறு இதழ்களின் எழுத்தையும், அதன் செயற்பாடுகளையும் காட்டினாய். உடற்சக்கரமாகிய மூலாதாரத்தில் உன் இருப்பாகிய நாடியையும் காட்டினாய். (மூலநாடியில் தும்பிக்கை போல் ஓர் நாடி துடித்துக் கொண்டே இருக்கும். இது விநாயகரின் அமைப்பு என்பர்)

Koviloor Digital Library

ஆறுமுக தூல மந்திரமாகிய ஓம் நமசிவய என்பதையும் நான்கு முக சூக்கும மந்திரமாகிய ஓம் சிவய என்பதையும் அ உம் நமசிவய என்னும் எட்டு எழுத்து மந்திரமாக்கி இனிது அருளினாய்.

முத்தி தந்தாய் :

புரியட்டகாயம் ஆகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், மனம், புத்தி, அகங்காரம் என்னும் எட்டு நுண்ணுடம்பைப் புலப்படும்படி செய்து எட்டு நிலைகளையும் காணும்படி அருள் செய்தாய். சித்தத்தில் கபால வாயிலைக் காட்டினாய். ஆன்மாவை அங்கேயே இருத்தி வைத்தாய். இதன்மூலம் இனிய முத்தியை எனக்கு அளித்தாய்.

உடலுக்குள் ஆன்மா :

" நான் யார்?" என்று என்னையே நான் அறியும்படி அருள் செய்தாய். இந்தப் பிறப்பிற்கு முந்திய பிறப்பில் செய்த வினையினை வேரோடு களைந்தாய். வாக்கையும், மனத்தையும் பிராணனில் தேக்கி ஒடுக்கி மனம் லயம் ஆகும்படி (ஒன்றும்படி) செய்தாய். இதனால் ஆசை அகல சிந்தை தெளிவடையும்படி செய்தாய். அறியாமை இருளிற்கும், அறிவாகிய ஒளிக்கும் இடம் ஒன்றே என்றாய். அருள் தருகின்ற ஆனந்த வெள்ளத்தில் மூழ்கடித்தாய். என் காதுகளில் அளவு கடந்த ஆனந்தத் தேனைப் பாய்ச்சினாய். அல்லல் தரும் பிறவியை நீக்கினாய். அருள் வழி காட்டினாய். ஒளியில் எழும் ஓசை ஒலியெலாம் ஆன

Koviloor Digital Library

சதாசிவம் காட்டினாய். சித்தமாகிய உயிருணர்வில் சிவலிங்கம் காட்டினாய். பசு முடியில் நூற்றில் ஒரு பங்காம் அணு அளவை ஆயிரம் பங்காக்கிய அணுவிற்கு அணுவாகிய ஆன்மாவை, வானில் எப்பாலும் நிறைந்து திரண்டிருக்கும் பெரெண் ஆன்மாவை, கணு முற்றி நின்ற கரும்பு போல் என் உடலுக்குள்ளே காட்டினாய்.

விநாயக விரைகழல் சரண் :

சிவ வேடமாக்கி ஆசை நீற்றிய நீறு விளங்கும்படி செய்தாய். அன்பரொடு மருவி இருக்கும்படி மெய் அடியார்களுடன் கூட்டி வைத்தாய். அஞ்செழுத்தின் அரிய பொருளாய் விளங்கும் செம்மலர் நோன் தாளை நெஞ்சக் கருத்தாகிய அநாகத்தில் இருக்கும் நிலையை அறிவித்தாய். " நீயே நான் " என்ற உண்மையை உணர்த்தி எனை ஆட்கொண்டாய். அறிவிக்க அறியும்படி ஞானத்தை அகம் வித்திய விநாயகனே! உன் புகழ் மணம் மிக்க திருவடியைச் சரண் அடைந்தேன்.

போற்றி ! போற்றி !!

Kovilloor Digital Library

அருஞ்சொல் பொருள்

சீதம் – குளிர்ச்சி

களபம் – சந்தனம் – (விநாயக) யானை

வன்னம் – அழகு

எறிப்ப – ஒளிர

பேழை – நகை வைக்கும் பெட்டி

கோடு – தந்தம்

சிந்துரம் – சிவந்த பொட்டு

அங்குசம் – துரட்டி

பாசம் – அன்பால் அடியரைக் கட்டும் கயிறு

நான்ற – தொங்குகிற

துரியம் – தன்வயமாய் நிற்கும் தவநிலை
"ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச்
சுட்டறுத்துத் தூங்காமல் தூங்குவது"
பேருறக்கம்

மூஷிகம் – மூஞ்செலி

மாயா – ஒடுங்குவதில் தோன்றுவது
(சத்காரிய வாதம்)
ஆசையும் அப்படியே ; அதனால் வரும்
பிறவியும்அப்பபடியே

குவலயம் – உலகம்

திரம் – நிலைத்திருக்கச் செய்தல்

கொடு – வளைந்த

உவட்டா – திகட்டாத

Koviloor Digital Library

திருச்சிற்றம்பலம்

பேரா – பெயராமல்

இடைபிங்கலை – இடகலை, பிங்கலை

நான்றெழு – பிடிப்பின்றி எழுகிற

அசபை – அசபா மந்திரம்
வாய்விட்டு நம் முயற்சியின்றி உருவாகும் இயற்கை ஒலி மந்திரம்

ஆதித்தன் – சூரியன்

குமுதசகாயன் – சந்திரன்; அல்லி மலர் மலரச் செய்யும்

முதல் – வேர்

லயம் – ஒன்றுதல்

அல்லல் – துன்பம்

கணு முற்றி நின்ற கரும்பு உடம்பு
உடம்பினுள் கணுவாகிய ஆறு ஆதாரமும் முற்றி நிற்கும் உடலாகிய கரும்பு

தத்துவம் தத் – அது
துவம் – (தும்) நீ
அதுவாகிய நீயே நான்.

17915

Kovitoor Digital Library

விநாயகர் வழிபாட்டுப் பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

வாக்குண்டாம்; நல்ல மனமுண்டாம்; மா மலராள்
நோக்குண்டாம்; மேனி நுடங்காது – பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

பாலும் தெளிதேனும் பாகும்பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் – கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே! நீ எனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா.

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும்எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே. –திருமூலர்

பிடிஅதன்உருஉமை கொளமிகு கரியது
வடிவொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலம்உறை இறையே.
–திருஞானசம்பந்தர்

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத்தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவோம். –கச்சியப்பர்

Kovilloor Digital Library

அல்லல்போம்; வல்வினைபோம்; அன்னைவயிற் றில்பிறந்த
தொல்லைபோம்; போகாத் துயரம்போம் - நல்ல
குணம்அதிகமாம் அருணை கோபுரத்துள் மேவும்
கணபதியைக் கைதொழுதக் கால். -விவேகசிந்தாமணி

முன்னவனே ; யானை முகத்தவனே ; முத்திநலம்
சொன்னவனே ; தூய்மெய்ச் சுகத்தவனே ; மன்னவனே ;
சிற்பரனே ; ஐங்கரனே ; செஞ்சடையஞ் சேகரனே ;
தற்பரனே ; நின்தாள் சரண். -வள்ளலார்

கணபதி யென்றிடக் கலங்கும் வல்வினை!
கணபதி யென்றிடக் காலனும் கைதொழும்!
கணபதி யென்றிடக் கருமம் ஆதலால்
கணபதி யென்றிடக் கவலை தீருமே.

ஓரானைக் கன்றை, உமையாள் திருமகனைப்
பேரானைக் கற்பகத்தைப் பேணினால் - வாராத
புத்திவரும்; வித்தைவரும்; புத்திரசம் பத்து வரும்;
சத்தி தரும்; சித்திதரும் தான் -நக்கீரதேவர்

முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த அதி தீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புனம் அதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே! -திருப்புகழ்

Koviloor Digital Library

சித்திதரும் புத்திதரும் செந்திருவைச் சேர்விக்கும்
பத்திதரும் மெய்ஞ்ஞானம் பாலிக்கும்- கொத்தி
அரிமுகனைக் காய்ந்த அருணேசர் தந்த
கரிமுகனைக் கைதொழுதக் கால். —அருணகிரி அந்தாதி

ஒரு கோட்டன் இரு செவியன் மும்மதத்தன்
நால்வாய் ஐங்கரத்தன் ஆறு
திருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையன்
தரும் ஒருவா ரணத்தின் தாள்கள்
உருகோட்டன் பொடும் வணங்கி ஓவாதே
இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திருகோட்டும் அயன் திருமால் செல்வமும்
ஒன்றோ என்னச் செய்யும் தேவே.

—சிவஞான சித்தியார்

வேதக் கரும்பை விரும்பிச் சுவைக்கின்ற
சீத அருட்களிற்றுச் செல்வனே! செந்தமிழை
ஓதி முழுதுணரா என்பாட்டுப் பேய்க் கரும்பும்
தீதில் இனிப்பெனவே தின்னு. —வ. விசயரங்கன்

அவ்வை அகத்தமர்ந்து அன்புத் தமிழ்விரும்பி
அவ்வை யகத்துக்(கு) அருள்செய்தோய் - செவ்வைசேர்
மூலனே! வாசியை மூட்டுகிற முன்னவனே!
சீலனே! முத்தியின்பம் சேர். —கொ. பூமிநாதன்

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

Kovilor Digital Library

தலைமை அலுவலகம்

ரெப்கோ வங்கி



வளருங்கள் எங்களுடன் | இந்திய அரசு நிறுவனம்

(இந்திய அரசு நிறுவனம்)

ரெப்கோ டவர், 33, வடக்கு உஸ்மான் சாலை,
தியாகராய நகர், சென்னை - 18.

- வைப்புத் தொகைக்குக் கூடுதல் வட்டி
- மூத்த குடிமக்களுக்குச் சிறப்பு டெபாசிட் திட்டம்
- மகளிர்களுக்காக - மகிளா டெபாசிட் திட்டம்
- இருப்பிடத்திலிருந்தே சேமிக்கும் - தினசரி சேமிப்புத் திட்டம்
- அசையாச் சொத்தின் பேரில் அனைத்துத் தேவைகளுக்கும் அடமான கடன்
- அனைத்து வேலை நாட்களிலும் நகைக்கடன் வழங்கப்படும்
- பாதுகாப்புப் பெட்டக வசதி உள்ளது.

ரெப்கோ வங்கி



வளருங்கள் எங்களுடன் | இந்திய அரசு நிறுவனம்

இராஜபாளையம் கிளை

352, பி.ஏ.சி. இராமசாமிராஜா ரோடு, (மகாலட்சுமி காம்ப்ளக்ஸ்)
ஜெயஆனந்த் தியேட்டர் எதிரில், இராஜபாளையம் - 626 117.

போன் : 04563 - 224477

பிற தென்மண்டலக் கிளைகள் :

மதுரை	0452 - 2342875	கோவில்பட்டி	04632 - 230032
மதுரை வடக்கு	0452 - 2536575	திருநெல்வேலி	0462 - 2579136
மதுரை தெற்கு	0452 - 2673766	திருநெல்வேலி டவுன்	0462 - 2320600
மேலூர்	0452 - 2415575	தூத்துக்குடி	0461 - 2333908
சிவகாசி	04562 - 225574	இராமநாதபுரம்	04567 - 222744

மேலும் விபரங்கள் அறிய... www.repcobank.co.in

முத்து அச்சகம், இராஜை. செல் : 93674 24064